www.tamilarangam.net

# வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மலையக மக்களின் பிரச்சினை

மலையக மக்களின் வரலாறு குறித்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கியுள்ளது. இவ் ஒன்றரை நூற்றாண்டு கால வரலாறு என்பது ஒரு சோகக் காவியமாகும். இக் கறை படிந்த வரலாற்றுக்கு பிரித்தானிய காலனித்துவ வாதிகளை மாத்திரம் காரண கர்த்தாக்களாக கொள்வதற்கில்லை. பெயர் அளவிலான இலங்கைத் தேசிய சிங்களத் தலைவர்களும் துணைபோகினர் என்பது மறக்க முடியாத உண்மையாகும். சுதந்திரத்திற்கு முன்னும் அதற்குப் பிற்பட்ட கால கட்டத்திலும் இந்திய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இவர்களே முன்னின்று நிறைவேற்றியுள்ளனர். இது தொடர்பாக இலங்கை அரசியலில் இடது சாரிகளை விலத்திப் பார்த்தால் இவ் உண்மை புலனாகும். அவ் வகையில் பிரஜா உரிமைச் சட்டமானது தனக்கென நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது.

குடிப்பெயர்வு என்பது அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளின் தோற்றப்பாடு என்பதும் இலங்கைக்கு மட்டும் உரியதன்று. மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களின் காலனிகளாக உருவாகிய நாடுகளின் பொதுவான பிரச்சனையாகும்.

இலங்கை மக்கள் சார்ந்த இன கலாச்சார ஆய்வில் இந்திய இனத்தவர்கள் பற்றிய பிரச்சனையானது ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது. தென் இந்தியாவிற்கு அண்மையில் இலங்கை இருப்பதனால், தொடர்ச்சியான மக்கள் பரவலை இந் நாடு எதிர்நோக்கியுள்ளது. இக் குடிபெயர்வானது இரு வேறுபட்ட தன்மையினை உள்அடக்கியுள்ளது. அதாவது நீண்ட காலத்திற்குமுன் குடி பெயர்ந்தவர்கள். அண்மைக் காலம் பெருந்தோட்டத்தின் பொருட்டு குடி பெயர்ந்தவர்கள் என்பதாகும்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1948 சுதந்திரத்தின் பின்னர் சிங்களத் தலைவர்களைப் பொறுத்து இவ்விரு பிரிவினையும் ஒரே அளவில் வைத்து இலங்கையர் என ஏற்பதா என்பதையிட்டு விவாதித்தே வந்துள்ளனர். அளவு அடிப்படையில் இவ் இரு பகுதியினரையும் இலங்கையர் மயமாக்குவதே பாரபட்சம் காட்டப்படுகின்றது. எவ்வாறுயினும், முன்பு வந்தவர்களை விட அண்மைக் காலக் குடிப்பெயர்வாளர்களை இலங்கையர் என்ற ஜனத்தொகையில் சேர்ப்பதை இவர்கள் தவிர்த்து வருகின்றனர். எனவே தான் இந்தியர் பிரச்சனை, பெரும் பிரச்சனையாக எதிர்நோக்கப்படுகின்றது. வேறு எந்த விடயங்களையும் விட பாராளுமன்றத்தில் பல மணித்தியாலங்களை இதன் விவாதத்திற்காகவே செலவிடப்படுகின்றது.

பிரச்சினையின் களம்:-

இவ்வாறு இந்திய மக்களை இந்நாட்டின் தேசியக்கூறுடன் இணைப்பதற்கும் இலங்கையர் மயமாக்குவதற்கும் ஏற்புடையவர்களாக அமையவில்லை என்பதற்கு இவர்கள் இலங்கை மக்களுடன் "கலக்கவில்லை" என்ற குற்றம் சுமத்தப்படுகின்றனர். இதனை சேர். ஜோன். கொத்தலாவலை அடிக்கடி கூறி வந்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய மக்கள் இலங்கை மக்களுடன் கலக்கவில்லை என்பது உண்மையெனினும், இம் மக்களைப் பொறுத்து 'கலத்தல்' என்பது அவர்களின் விருப்பு, வெறுப்பிற்கு அப்பாற்பட்ட விடயமாகும். பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரத்தையும், இம் மக்களது வாழ்க்கைச் சூழலையும் அவதானித்தால் இது பொருத்தமற்ற வாதமென்பது புலப்படும். 1920க்குப் பிற்பட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றுப் போக்கை அவதானித்தால் இன்று வரை ஒரு குறிப்பிட்ட நோக்குடனேயே இந்தியர் தொடர்பான பிரச்சினை அணுகப்பட்டு வந்துள்ளதென்பதை அறிந்து கொள்ளலாம்.

<u>இங்கு நிலையாக வாழ்வது தொடர்பான பிரச்சினை :-</u>

இலங்கை இந்தியர் பிரச்சினையின் மிகவும் அடிப்படையானதும், சர்ச்சைக்குரியதுமான அம்சம் இந்தியத் தொழிலாளர்களின் குடியிருப்புப் பற்றிய பிரச்சினையாகும். இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இந்தியரில் பெரும்பான்மையினர் இலங்கையையே தமது தாயகமாகக் கொண்டுள்ளனர், என்பதாகும். மறுபுறத்தில் இலங்கை அரசாங்கமானது, இம் மக்கள் இந் நாட்டின் மீது எவ்வித அக்கறையும் கொள்ளாது, வேலை வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் இங்கிருப்பதும், வேலை இல்லாத பட்சத்தில் இந்தியாவிற்குத் திரும்பி விடுவதையும் ஒரு வாடிக்கையாகக் கொண்டுள்ளனர் எனக் கருதியது.

இதில் கணக்கிடப்படத் தக்க அம்சம் என்னவெனில், இலங்கையில் வாழும் இந்தியரில் எத்தனை வீதத்தினர் இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ளனர் என்பது பற்றி இரு நாடுகளிலும் சிறந்த ஆய்வெதுவும் மேற் கொள்ளப்படவில்லை. இது சம்பந்தமான அறிக்கைகள் வித்தியாசமான மதிப்பீட்டினைக் கொடுத்துள்ளன. அத்துடன் இவை திட்டவட்டமான சான்றின் அடிப்படையிலும் அமையவில்லை.

அவ்வகையில்,

| | | | |
|---|---|---|---|
| 1978 - டொனமூர் அறிக்கை | - | 40% | - 50% |
| 1938 - ஜக்சன் அறிக்கை | - | 60% | |
| சோல்பரி அறிக்கை | - | 80% | |
| இந்தியர்களுக்காக பாராளுமன்றத்தில் வாதாடியவர்கள் | - | 60% | |

இவ்வாறு மதிப்பீடானது வேறுபாடானதாக அமைந்துள்ளது.

இந்தியர் வருகையானது 19 ஆம் நூற்றாண்டின் 4 வது தசாப்தத்தில் தொடங்கியபோதும் அந் நூற்றாண்டின் இறுதிப்பகுதிவரை, குடி பெயர்ந்தோரில் பெரும்பாலானோர் ஆண்களே. எனவே அரை நூற்றாண்டுக்காலம் இவர்கள் நிரந்தர வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை எனத் தெரிகின்றது. 19 ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியுடன் பெண்களினதும் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. தேயிலையின் வரவானது இந்நிலைமையைத் தோற்றுவித்ததெனலாம். 1924 இல் 56% மான இந்தியர் பெண்களையும், பிள்ளைகளையும் கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1949 இல் இது 55% ஆக இருந்தது. எனவே இவ்வாண்டுகளில் இந்தியத் தொழிலாளர்கள் நிரந்தரமாக இங்கு வசிக்கத் தொடங்கி விட்டனர் என்பது புலனாகின்றது. ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவர்கள் இந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்பும், இந்தியாவில் தம்மில்தங்கி வாழ்வோர்க்கு பணம் அனுப்புதல் போன்றவைகளாலும் இம் மக்களை இந் நாட்டின் மீது விசுவாசமற்றவர் களெனக் கூற வைத்தது.

வலது சாரி சிங்களத் தலைவர்களின் இந்திய விரோதப் போக்கு:-

இந்தியப் பிரச்சினையை அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் இந்திய விரோதப் போக்கிற்கான வாதத்தை முன்வைத்துள்ளனர்.

அரசியல்:-

இந்தியர் பிரச்சினை 1930 அளவில் தான் அரசியல் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. இக் கால கட்டத்தில் பிரித்தானியரினால் வழங்கப்பட்ட அரைப் பொறுப்பாட்சியின் தன்மையானது, இதற்கான களத்தை அமைத்துக் கொடுக்கின்றது. சிங்கள வலது சாரித் தலைவர்களைப் பொறுத்த, இந்தியர் இவ்வாட்சி அமைப்பில் பங்குபற்றுவதை விரும்பவில்லை. எனவே, வாக்குரிமை தொடர்பாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

பிரித்தானியரால் வழங்கப்பட்ட வாக்குரிமையானது சகல பிரித்தானியப் பிரசைகளுக்குமாகப் பரவலாக்கப்பட்ட போதும், இந்தியரைப் பொறுத்து நிபந்தனையின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டது. அம்மக்கள் வாக்குரிமையைப் பெறுவதற்கு ஐந்து வருட வாசகாலமானது போதுமானதாகக் கணிக்கப்பட்டது. ஆனால், சிங்களத் தலைவர்கள் இந்நிபந்தனையானது இந்தியர்களுக்குக் கட்டுப்பாடற்ற முறையில் வாக்குரிமை அளிப்பதாக அமையும் என்பதனால், இன்னும் கூடிய தகமைகளைக் கோரினர். அத்துடன் ஏ.ஈ.மொலமுரே போன்றோர், இந்தியருக்கு வாக்குரிமை கொடுப்பதை முன்னிட்டே தாங்கள் எதிர்ப்பதாகமிக வெளிப்படையாக இந்திய விரோதப் போக்கை முன் வைத்தனர்.

சிங்களத் தலைவர்களின் தொடர்ந்த எச்சரிப்பினால் காலனித்துவ அரசாங்கமானது திருத்தம் கொண்டு வந்தது. உதாரத்துக்கக் பின்வருமாறு,

1. 7வது உதாரத் - இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையைத் தாயகமாகத் தெரிவு செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்கு 5 வருட கால வாசமும் அவசியமாகும்.

அல்லது,

2. 8வது உதாரத் - கல்வி, அறிவு, சொத்துடைமை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

3. 9வது உதாரத் - நிரந்தர குடியிருப்புப் பத்திரத்தைச் சேர்த்து விண்ணப்பதாரி இந்நாட்டில் நிரந்தரமாக இருப்பேன் என உறுதிமொழி கூறுதல் வேண்டும். ஆனால் விசேடமான சலுகைகளைக் கோர முடியாது.

www.tamilarangam.net

இச் சரத்துக்களில் 7 வது உறுப்புரையில் ஐரோப்பியருக்குப் பாதகமாக அமைந்தமையால், 8வது உறுப்புரைப் புகுத்தப்பட்டது. இவ்விரு உறுப்புரைக்குளிலும் இந்தியர் விண்ணப்பிக்க முடியாது. எனவே இந்தியருக்கென விசேடமாகப் புகுத்தப் பட்டதே 9 வது உறுப்புரையாகும்.

ஆனால் புதிய தேர்தல்சட்டத்தின் படி, சிங்களத் தலைவர்கள் எதிர்பார்த்தது போல இந்தியரின் பெரும்பான்மையினர் 9வது உறுப்புரையின் கீழ் விண்ணப்பிக்கவில்லை. 7 வது உறுப்புரையின் கீழ் விண்ணப்பித்து ஏற்கப்பட்டனர். 1931 ல் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, அவ் வருடம் பதியப்பட்ட இந்திய வாக்காளர் தொகை ஒரு (01) இலட்சமாகும். ஆனால் பழைய அரசியர்திட்டத்தில் 12,438 பேராகும். ஒன்றுக்கு ஒரு வீதம் இந்திய வாக்காளர் தொகை அதிகரித்துள்ளது.

பின்வரும் அட்டவணையானது அதிகரிக்கும் வாக்காளர்களைக் காட்டுகின்றது.

| | | |
|---|---|---|
| 1931 | – | 1,000,00 |
| 1936 | – | 1,45,000 |
| 1938 | – | 1,70,000 |
| 1939 | – | 225, 000 |

இவ்வாறு இந்திய வாக்காளரின் தொகை அதிகரித்து வந்தபோதும், சிங்களத் தலைவர்களின் தொடர்ந்த வாதங்களினால், 1940 க்குப் பின் கட்டுப்படுத்தப் பட்டது. அதாவது மிகக் கடுமையாக்கப்பட்டது, என்பதே பொருந்தும். 1943ல் 1,68,000 பேர் வாக்குரிமை பெற்றனர். இது 1939 ஐ விட 57,000 வாக்காளரால் குறைகின்றது. இதனை இன்னும் கட்டுப்படுத்திய போதும் பெரும்பாலான இந்தியர்கள், 7 வது உறுப்புரைக்குக் கீழ் விண்ணப்பித்து ஏற்கப்பட்டனர். இரண்டு வீதத்தினரே 9 வது உறுப்புரையின் கீழ் விண்ணப்பித்தனர். 1940 க்குப் பிற்பட்ட இந் நடைமுறைச் செயற்பாடானது 1948 இல் மேலும் கடுமையாக்கப்பட்டு, 5வருட வாசகாலமானது, மூன்று தலைமுறையைக் காட்டுமாறு கேட்கப்பட்டது.

வாக்குரிமை தொடர்பான அடுத்த முக்கிய பிரச்சினையாக இடம் பெறுவது கிராமக் கமிட்டியில் இந்தியர் பங்குபற்றுவது தொடர்பானதாகும். 1889 ல் பிரித்தானியரால் இது பற்றிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இது கிராமிய மக்கள் நலன் சார்ந்தமையினால், பரங்கியர், ஐரோப்பியர், இந்தியத் தொழிலாளர் போன்றோர் பங்கு பற்றுவது தவிர்க்கப்பட்டது. ஏனெனில் இவர்கள் கிராமவரி செலுத்துவதில்லை. கிராம வாழ்க்கையுடன் நெருக்கமாக இணையாததினால் கிராமக் கமிட்டியினால் ஏற்படுகின்ற நலன்களை இவர்கள் அனுபவிக்க முடியாது என்பதினால் ஆகும்.

எனினும் 1924ல் இந்தியத் தொழிலாளரையும் சேர்க்க வேண்டுமெனத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது அப்போதே இந்தியப் பிரதிநிதியாத கே.பி.எஸ்.மேனன் அவர்களால் எதிர்க்கப்பட்டது. கிராம வாழ்க்கையுடன் எவ்வித சம்பந்தமும் இந்திய மக்கள் கொள்ளவில்லை. எனவே, கிராமக் கமிட்டிக்கு வரி செலுத்தத் தேவையில்லை. பங்கு பற்றுவதும் பயனற்றது என்ற முறையில் தமது வாதத்தை முன் வைத்தார். இதனையே சிங்களத் தலைவர்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்தினர்.

www.tamilarangam.net


1937 இல் இச் சட்டம் திருத்தப்பட்டபோது பறங்கியர், ஐரோப்பியர் போன்றோர் இணைக்கப்பட்டனர். இந்திய மக்கள் இதிலிருந்தும் விலக்கப்பட்டனர். இது திட்டவட்டமான இனப்பிரிவினையைக் காட்டுவதாக அமைந்துள்ளதென இந்தியப் பிரதிநிதிகள் எதிர்த்தனர். இந்திய அரசாங்கம் இதனையே வலியுறுத்தியது. ஆனல் குடியேற்றச் செயலாளர் கிராமக் கமிட்டியிலிருந்து இந்தியர் விலத்தப்பட்டமை நியாயம் எனக் கூறினர்.

பொதுவில் இவ்விடயமாக இரு பகுதியினரும் முரண்பட்டனர். 1889 இல் கிராமக் கமிட்டி என்ன நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ, அந்த நோக்கத்துடன் தொடர்ந்தும் செயல்பட்டதாக அமையவில்லை. குடியேற்றச் செயலாளர் கூறுவது போன்ற இந்தியர் இவ்வமைப்புக்குள் இணைக்கப்படத் தகுதியற்றவர்கள் எனின், ஐரோப்பியர்கள் இணைக்கப்பட்டதற்கான காரணம் புரியவில்லை. எவ்விதத் தகுதியற்ற இம்மக்கள் பற்றிக் குரல் கொடுக்காத சிங்களத் தலைவர்கள், இந்தியர் பொறுத்துக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் இம் மக்களது கிராமக் கமிட்டி வாக்குரிமையை மறுதழித்துள்ளனர். உண்மையில் இந்திய மக்களின் வாக்குரிமைச் சக்தியைக் கண்டுதான் சிங்களத் தலைவர்கள் பயப்படுகின்றர்களாயின், இலங்கையில் மொத்தமாக உள்ள 327 கிராமசபைகளிலும், இவர்களது ஆதிக்கம் பரவல் பற்றிப் பயப்படுவதில் அர்த்தமில்லையா? தீவிலுள்ள மொத்த கிராமசபைப் பகுதிகளான 397 – இந்தியர் செல்வாக்குச் செலுத்தக்கூடியவை;

| | | |
|---|---|---|
| கண்டி | – | 4 |
| மாத்தளை | – | 3 |
| நுவரெலியா | – | 4 |
| பதுளை | – | 7 |
| கேகாலை | – | 1 |
| இரத்தினபுரி | – | 3 |

என மொத்தமாக 22 அளவில்தான் செல்வாக்கைச் செலுத்த முடியும். எனவே, சிங்களத் தலைவர்களின் இவ்வெதிர்ப்பானது வெறும் பயத்தினடிப்படையில் கூட அமையாது, இந் [illegible] விரோதப் போக்கின் ஒரு அம்சமாகவே அமைந்தது.

<u>பொருளாதாரம்:-</u>

சிங்களத் தலைவர்களின் இந்திய விரோதப் போக்கிற்கு 1931 டொனமூர் சிபார்சில் வழங்கப்பட்ட பொறுப்பாட்சி [illegible]மைதான் காரணமெனக் கொண்ட போதும், 1930 களில் உருவாகிய பொருளாதார மந்தமும் காரணமாகியது. பொருளாதார மந்தமானது எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்பைப் பாதித்தது. எனவே இச் சிங்களத் தலைவர்கள் இந்திய மக்களை அரசியல் ரீதியாகப்பயமுறுத்து பவர்களாக கருதி வந்தார்கள். பொருளாதார ரீதியிலும் ஒரு சுமையெனக் குற்றம் சுமத்தினர்.

இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதியில் பெருமளவு தங்கியுள்ளது. இதனல் 1929 ன் மத்திய பகுதியிற் கூட ஐக்கிய அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் தாக்கமானது இங்கும் உணரப் பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1930க்கும் 1933 க்குமிடையில் தேயிலை, கொப்பரா, காரியம் என்பவற்றின் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்தன.

அரசாங்கம் முக்கியமாக வேலையின்மைப் பிரச்சினையை எதிர்நோக்கியது. அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பெருமளவு ஆட் குறைப்பு செய்யப்பட்டது. தேயிலை, இறப்பர், தென்னந்தோட்டங்கள் பல மூடப்பட்டன. அல்லது தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தனர்.

நகரங்களில் வேலையின்மைப் பிரச்சினை மோசமடைந்தது. பயிர்சி பெற்ற பயிர்சியற்ற தொழிலாளர்களிடையேயும்வேலையின்மைப் பிரச்சினை காணப்பட்டது. இதே வேளையில் அரசாங்கமும்பொது வேலைகள் மீதான செலவைக் கடுமையாக வெட்டியது. நாட்டின் சகல துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர்.

இக் கால கட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர். நாட்டின் ஏனைய தொழிலாளர்களைப் போல் இங்கும் வாழ்க்கை நிலைமை மோசமடைந்தது. ஆழமாகிச் சென்ற பொருளாதார நெருக்கடி காரணமாக, இவர்களுக்கென வழங்கப்பட்ட குறைந்த பட்சக் கூலியும் தட்டிக் கழிக்கப்பட்டது.

ஆனால் இக் கால கட்ட நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்கும் இந்திய மக்கள் தான் காரணமெனச் சிங்கத் தலைவர்கள் குரல் கொடுத்தனர். இதன் காரணமாக 1930 ல் முழுவதிலும் இந்தியக் குடிவரத்தைக் குறைப்பதில் கவனம் செலுத்தினர். பொருளாதார நெருக்கடியும், அதனுடன் தோன்றிய வேலையில்லாப் பிரச்சினையும் உளுத்துப்போன முதலாளித்துவ அமைப்பினைச் சார்ந்ததென ஒரு இடது சாரி சிங்களத் தலைவர் கூறியபோதும், வலது சாரிச்சிங்களத் தலைவர்கள் இதற்கு மாறாகக் குரலெழுப்புவது எந்தளவுக்கு நியாயமானது என்பதை நோக்குவது அவசியமாகும்.

இலங்கையின் தேசிய வருமானத்தில் இன்று வரை 65 வீதத்திற்கு மேற்பட்ட வருமானத்தை ஈட்டிக் கொடுப்பது பெருந்தோட்டத் துறையாகும். எனவே, தான் 1930 களில் இந்தியக் குடிவரவைக் கட்டுப்படுத்துமாறு சிங்களத் தலைவர்கள் கோரிய போதும், இலங்கைத் தோட்ட முதலாளிகளும், பிரிட்டிஷ் அரசாங்கமும் அவர்களைக் கட்டுப்படுத்துதல் என்பது சாத்தியமற்றதெனக் கருதினர். அத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களுக்குப் பதிலாகச் சிங்களவர்களைப் பெருந்தோட்ட அமைப்புக்குள் புகுத்துதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதெனக் கருதியதுடன், இலங்கை இந்தியக் குடி வரவானது ஒரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டிருப்பதால் அதனை நிறுத்துதல் என்பதும் இலகுவானதல்ல எனவும் கருத்துத் தெரிவித்தனர். குடிவரவைத் தடுப்பதானது இந்தியாவுடன் மோதிக் கொள்வதாகவும், இலங்கைக்குப் பொருளாதார ரீதியாக நஷ்டம் ஏற்படுமென மேலும் தெரிவித்தனர். எனவே இந்தியர் விரும்பியோ விரும்பாமலோ இந் நாட்டின் பொருளாதாரத்தில் இன்றியமையாதவர்களாக இருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவேதான் கட்டுப்பாடில்லாத குடிவரத்துத்தான் வேலையில்லாப் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் தோன்றக் காரணமாகினவா என்பதை ஆராய்வதற்காகத் தனி நபர் கொண்ட கமிஷனை 1936 ல் பிரித்தானிய அரசாங்கம் நிறுவியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக் கமிஷனானது தனது அறிக்கையில் இந்தியர் வருகையால் இலங்கைக்கு எந்த விதப் பொருளாதார நஷ்டமும் ஏற்படவில்லை. எனவே நடைமுறையில் இருக்கும் குடிவரத்துக்கான கட்டுப்பாடுகளை விட விசேசமான கட்டுப்பாடுகள் தேவையில்லை எனக் குறிப்பிட்டது. இவற்றுடன் எதிர்காலத்தில் கணிசமான அளவு காலப்பகுதியில் தோட்டங்களில் வேலை செய்ய இந்தியர் தேவை என்பது தெளிவாகுகின்றது, எனவும் குறிப்பிட்டுள்ளது.

வேலையில்லாப் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுகையில் இந்தியர்கள் இங்கிருந்த போதும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு காரண கர்த்தாக்களாக இருக்கவில்லை. வேலை இல்லை எனில் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவர். அத்துடன் சிங்களத் தொழிலாளர்களின் நடவடிக்கையும் இவர்களை இங்கு ஈர்ப்பதாகவுள்ளது. ஏனெனில் சமூகத்தில் தாழ்ந்த தொழில்களைச் செய்ய இவர்கள் விரும்புவதில்லை. எனவே இவர்கள் ஆர்வம் காட்டாத தொழில்களை நோக்கித் தான்இந்தியர் வருகின்றனர். இதன் காரணமாகத் தோட்டத் துறை சார்ந்த தொழிலாளர்களைப் பொறுத்தும், இத்துறை சாராத தொழிலாளர்களைப் பொறுத்தும் வேலையில்லாப் பிரச்சினைக்குக் காரணமானவர்களாக இடம் பெறவில்லை என்பதாகும். பொருளாதாரத் தளம்பலும், உலகச் சந்தையின் நிலைமையுமே பொருளாதாரப் பாதிப்பும், அதனுடன் இணைந்த பிரச்சினைகளும் தோன்றக் காரணமாகின எனப்படுதல் பொருந்தும்.

இச் சந்தர்ப்பத்தில்ஜக்ஷன் கமிஷனின் கூற்றுன சிங்களத் தொழிலாளர்கள் வேலை செய்யத் தயங்கியது என்பது உண்மைதான். சிங்களத் தலைவர்களும் இந்தியர் இலங்கையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்கள் என்பதையும் ஏற்றுள்ளனர். ஆனல் தோட்டத் துறை சாராத பிற தொழிலில் ஈடுபடுபவர்களால் பிரச்சினை தோன்றுகின்றதெனக் கூறி ஜக்ஷன் அறிக்கையைப் புறக்கணித்துக் குடிவரத்து மசோதாவை 1941 ல் தயாரித்தனர்.

இலங்கையர் மயமாக்கத்தின் தோற்றம்:

1939 ல் நாளாந்தக் கூலி பெறுகின்ற இந்தியத் தொழிலாளர்களை இலங்கை அரசு நீக்கியது. அது பொருளாதார மந்தத்தினதும், வேலையில்லாப் பிரச்சினையினதும் திடீர்த் தாக்கமெனக் கொள்வதற்கில்லை. 1920ல் இருந்து நடைபெற்று வந்த இலங்கையர் மயமாக்கத்தின் ஒரு வினையெனலாம். பொருளாதார மந்தம் தொடங்குவதற்கு முன்பே டி.எஸ்.சேனநாயக்கா, ஏ.ஈ.குணசிங்கா போன்றோர், இந்தியாவில் இருந்து தங்குதடையற்ற குடிவரத்தானது இலங்கை மக்களின் மீது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியதெனக் கூறினர்.

1928 ல் குணசிங்காவின் இலங்கைத் தொழிலாளர் சங்கம் துறைமுகத்தில் தொழிலாளர் கொள்கைச் எடுத்தது. துறை முகத்தில் ஏற்றி இறக்குவதில் இனிமேல் 25 % வீதமான இலங்கையர் சேர்க்கப்படல் வேண்டுமென ஒப்பந்தம் செய்தது. 1929 ல் புகையிரத ஊழியர்களிலும் இலங்கையரல்லாதவர்கள் சேர்க்கப்படக் கூடாதெனக் கொள்ளப்பட்டது. இக் கொள்கையானது பொருளாதார மந்தத்துடன் வலுவடைந்தது. இதனைத் தொடர்ந்து 9000 இந்தியர் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். 1933ல் குணசிங்கா அரசாங்க சபையில் உரையாற்றும் பொழுது "இலங்கையர் கிடைக்கும் பட்சத்தில் சகல அரசாங்க திணைக்களங்களிலும் இலங்கையரல்லாதவர்கள் சேர்க்கப்படக்கூடாது" எனக்குறிப்பிட்டார். இது இந்தியர்களைப் பாதித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதன் காரணமாக இந்தியரது எண்ணிக்கை வேலைத்தளங்களில் குறைந்தது. சகல அரசாங்கத் துறைகளிலும் இந்தியரின் எண்ணிக்கையானது சீழ்க் காணும் வகையிற் குறைவடைந்தது.

1936 ல் - 26%
1939 ல் - 19%
1941 ல் - 12%

1937க்கு முன் புதிதாக இந்தியரை வேலைக்கமர்த்தக் கூடாதென்றனர். ஆனால் இவ் ஆண்டுக்குப்பின் இருப்பவர்களையும் நீக்கிவிட்டனர். 1939ல் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. நாளாந்தக்கூலி பெறுகின்ற இலங்கையரல்லாத ஊழியர்களின் இளைப்பாற்றும் திட்டமாகும். இதன் மூலம் இலங்கையரல்லாத ஊழியர்கள் கட்டாயமாக இளைப்பாற வைக்கப்பட்டனர். இதனால் இலங்கை அரசாங்கத் தொழில் புரிந்த ஆயிரம்பேரில் 2500 பேர் இளைப்பாறினர். இதில் அரைவாசிப்பேர் கட்டாயமாக இளைப்பாற வைக்கப்பட்டனர். இந்நடவடிக்கையானது அரசாங்கத் துறைகளிலும், வர்த்தக சேவையிலுமே நடைபெற்றது. தோட்டப்பகுதியில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1951 ன் பின்தான் தோட்டப் பகுதிகளுக்கு இது விஸ்தரிக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் ஊக்கமில்லாமலே தோட்டப்புறங்களின் சுதந்திரத்திற்கு முன்பே இலங்கையர் வேலை செய்யத் தொடங்கி விட்டனர்.

எனவே பொருளாதார மந்தத்தையும், அதனுடன் தொடர்புடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சிங்களத் தலைவர்கள் காட்டிய போதும் உண்மையில் இது ஏற்கெனவே தொடங்கிவிட்ட இலங்கையர் மயமாக்கத்தின் விளைவால் உருவாகிய இந்திய விரோதப் போக்கின்பாற்பட்டதெனலாம்.

சமூக ரீதியாக:

இலங்கை வரலாற்றில் இந்திய மக்களின் வரவானது சமூக ரீதியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியதென்பது உண்மையே. ஆனால் இத் தாக்கங்கள் நேரடியாக இம்மக்களால் ஏற்பட்டதல்ல என்பதும் அறிந்ததே. அவ் வகையில் கண்டிச் சிங்களச் சமூகம் நிலங்களைப் பறி கொடுத்ததோடல்லாமல், மிகவும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டு விவசாயிகள் என்ற சமூக அந்தஸ்தில் இருந்தே சிதைக்கப்பட்டனர். இதற்கான முழுப் பொறுப்பினையும் பிரித்தானிய காலனித்துவ வாதிகளே ஏற்க வேண்டும். ஆனால் கண்டிய மக்களின் பரிதாப நிலைக்கு இந்திய மக்களே காரண கர்த்தாக்களாகக் காட்டப்பட்டனர். இவ்வாறான பிரச்சனைகளே சிங்களத் தலைவர்களினால்மேற் கொள்ளப்பட்டன. இது இரு சமூகங்களுக்கிடையிலான பிளவை ஏற்படுத்த உதவியது.

பிரித்தானியரின் சுரண்டல்களுக்குச் சிங்கள விவசாயிகள் போன்று இந்திய தொழிலாளர்களும் ஆளாக்கப்பட்டனர். ஆனால் இதனைப் பிரித்தறிய முடியாத சிங்கள விவசாயிகள் தமது நிலத்திற்குள் தனி உலகமாக, வேலை வாய்ப்பு வசதிகளுடன் இந்திய மக்கள் வாழ்வதாக எண்ணினர். உண்மையில் இந்தியத் தொழிலாளர்கள் தென்னிந்தியாவில் தாம் வாழ்ந்ததைவிட சிறிது மேலான வாழ்க்கையைக் கொண்டிருந்தனர். இவ் வசதிகளைப் பெற முடியாத சிங்களச் சமூகம் அதிருப்திப்பட்டதில் வியப்பில்லை எனலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய மக்கள் அரசியல் ரீதியாகவும் சிங்களச் சமூகங்களுடன் எவ்விதத் தொடர்பும் கொண்டவர்களாகக் காணப்படவில்லை. ஒரு இலங்கையர் தேசிய வாதம் உருவாகி வெற்றி பெற முடியாத நிலையில், உருவாகிய தேசிய வாதம் தன்னைப் பேரின வாதத்திற்குள் அடக்கிக் கொண்டதிலும் இக் கசப்புணர்வு மேலும் ஆழமாக்க உதவியது. அத்துடன் இந்திய மக்களும் நேரு, காந்தி கோசங்களைப் போடுபவர்களாகவும், இந்திய அரசியலில் இவர்களது ஈடுபாடும்; பின் எழுச்சி பெற்ற தி.மு.க வினால் கவரப்பட்டமையும் இரு சமூகங்களுக்கிடையிலான விளைவை மேலும் வலுவாக்க உதவியது. அத்துடன் இந்தியர் எனத் தம்மை அடையாளம் காட்டும் வகையில் கட்சிகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இது தொடர்பாக இந்திய மக்களை குறை கூறுவதில் பயனில்லையாகும். இலங்கையில் அரசியல், சமூக ரீதியில் இந்நாட்டு மக்களுடன் கலக்க முடியாமைக்கான சகல நடவடிக்கைகளும் காலனித்துவ வாதிகளினாலும், இலங்கை வலது சாரிச் சிங்களத் தலைவர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு மேன் மேலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்தனர். இதனால் மலேயாவில் முஸ்லீம்களுடன் இந்திய மக்கள் ஒன்றிணைந்தது போன்ற ஒரு நிலை கூட இங்கு உருவாக முடியாமற் போயிற்றெனலாம்.

எனவே இரு சமூகங்களும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அவை மறுக்கப்பட்டன, என்பதே உண்மையாகும். இதனால் சிங்கள சமூகத்தவர்கள் இந்தியரை ஏகாதிபத்தியத்தின்சின்னமாகக் கருதினர். இவ்வாறான சிங்கள மக்களின் மனோநிலையைச் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஆட்சியாளர் சாதகமாகப் பயன்படுத்தினர். எனவேதான் 1948 பிரஜா உரிமை மசோதாபெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவைப் பெறக் கூடியதாக இருந்தது.

<u>இனமா? வர்க்கமா?</u>

இலங்கை அரசியலைப் பொறுத்து அரசியற் கட்சிகளின் நிலைப்பாட்டை அவதானித்தலும் அவசியமாகும்.

இந்திய மக்களின் பிரச்சனையானது இலங்கை அரசியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. அதனால் இப்பிரச்சனையால் உண்டான இலங்கை அரசின் உணர்வையும், அரசியல் பொருளாதார வாழ்வில் இதற்கிருந்த தொடர்பையும் கவனிக்கும் போது இந்தியத் தமிழர்களின் பிரதிநிதியாய் இல்லாதவர்கள் 1931ல் இருந்தே இந்தியர்களின் நலனுக்காக இயக்கம் நடத்தி வந்துள்ளமை கவனிக்கத் தக்கதாகும். டொனமூர் அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்த காலத்தில் இருந்து 1965ம் ஆண்டு பொதுத் தேர்தல் வரை லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இவர்களின் நலன்களுக்காக முன் நின்று உழைத்துள்ளனர். அதே நேரத்தில் தமிழரசுக் கட்சி இலங்கைத் தமிழர்களினதும், இந்தியத் தமிழர்களினதும் நலன்களை தழுவிய வண்ணம் முழுத் தமிழர்களின் நலன்களுக்கான இயக்கமாகத் தன்னைக் காட்டிக் கொள்வதில் தனது ஆரம்பகாலமான 1949ம் ஆண்டில் இருந்தே செயற்பட்டு வந்துள்ளது. ஆனால் யு. என். பி. கட்சியானது இந்திய மக்களுக்கெதிரானதாகவே இருந்து வந்துள்ளது.

www.tamilarangam.net



யு.__என்.__பி:

சுதந்திரத்தின் பின்பான முதல் மூன்று அரசாங்கங்களும்யு.என்.பி யின் அரசாங்கமாக இருந்ததினால் இலங்கையின் வேறு எந்த அரசியர் கட்சியையும் விட இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக இலங்கையின் கொள்கைகளை வகுப்பதில், இதுவே பிரதான பங்கை வகித்தது. 1965ம்ஆண்டு பாராளுமன்றத்திற்கு இது தெரிவு செய்யப்பட்டதன் விளைவாக 1964ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் படுத்தும் பொறுப்பும் இதனையே வந்தடைந்தது.

.1946 ல் இலங்கையில் இருந்த சிங்கள மகாசபை, இலங்கைத் தேசிய காங்கிரஸ், இலங்கை முஸ்லீம் லீக் ஆகிய அமைப்புக்களின் கூட்டிணைப்பாகவே யு. என். பி கட்சி உருவாக்கப்பட்டது. இதன் பல தலைவர்கள் டொனமூர் யாப்பின் கீழ்அமைச்சர்களாக இருந்தவர்களாகும். இலங்கை சுதந்திரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த காலத்தில், காலனித்துவ அரசாங்கத்தின். வீட்டோ அதிகாரத்தின் மத்தியிலும் இவர்கள் இந்தியக் குடியேற்றம், வாக்குரிமை, வேலை வாய்ப்புப் பிரச்சினை போன்றவற்றிற்கான கொள்கைகளை வகுப்பதில் முன்னணி வகிப்பவர்களாக இருந்துள்ளனர். இத்தலைவர்களிற்பலர் டி.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கத்திலும் தொடர்ந்து அங்கம் வகித்துள்ளனர். இதனால் 1930ல் இந்தியர் தொடர்பாகத் தொடங்கிய அரசியர் கொள்கையானது சுதந்திரத்தின்பின்பும் தொடர வழி ஏற்பட்டது. எனவே, டி.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கம் அமுல் நடத்திய பிரஜா உரிமை, குடியேற்றம் சம்பந்தமான சட்ட விதிகள் போன்றவை பல வருடங்களுக்கு முன் பெற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளின் பாற்பட்டதாகும்.

இலங்கையின் சமூகங்களுக்கிடையிலான வர்க்க வேறுபாட்டினையும் அதன் தன்மையினையும் தெளிவாக, திடநோக்குடன் அணுகி மிகத் திறமையான முறையில் வெற்றியையும் தேடிக் கொண்டதில்யு.என்.பி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது இக் கட்சியின் தலைவராக இருந்த டி.எஸ்.சேனநாயக்காவையே சார்ந்ததாகும். அவ்வகையில் இந்தியச் சமூகங்களுக்கிடையிலானவர்க்க முரண்பாட்டினைச் சரிவரப் பயன்படுத்தியதுடன், அகில இலங்கைரீதியான தொழிலாள நேச சக்தியுடன் இணைந்து வர்க்கப் போராட்டத்துக்கான பாதையைப் பலப்படுத்துவதையும் முன் கூட்டியே சிதைவடைய வைத்ததில் இவரது பங்கு முக்கியமானதாகும். இவர் வெளிப்படையாக இந்தியப் பண முதலைகளைத் தாக்கிய போதும் உண்மையில் இந்தியத்தொழிலாளர்களைக் கண்டுதான் பயந்தார். எனவே இவர்களுக்கெதிராக டி.எஸ்.சேனநாயக்கா செயற்பட்டதில் வியப்பில்லையெனலாம்.

இந்திய மக்களின் அரசியர் செயற்பாடும் மேற்கூறியதை நிர்ணயிப்பதாகவும், அவரது அச்சத்தை மேலும் ஆழமாக்குவதாகவும் காணப்படுகின்றது. 1947 பொதுத் தேர்தலின் போது இலங்கை இந்தியக் காங்கிரசின் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத தொகுதிகளில் இந்திய வாக்குகள் பொதுவாக மாக்ஸிய வேட்பாளர்களுக்கே அளிக்கப்பட்டனவெனலாம். வெற்றியடைந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இடது சாரிகளுடன் முதலாவது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவற்றுடன் இந்தியப் பிரதிநிதிகள் வெற்றி பெறும் தொகுதிகள் தவிர்த்து ஆகக் குறைந்தது 14 தொகுதிகளிலாவது இந்திய வாக்குகள் தேர்தல் வெற்றியை நிர்ணயிக்கும் நிலை உள்ளதைக் கணக்கில் எடுத்து யு. என். பி இந்திய நலன் தமது சொந்த நிலைமைக்கு ஆபத்தானது என்பதையும் கண்டு கொண்டது. 1947 - '52 தேர்தல் முடிவுகளை அவதானித்தால் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

யு. என். பி யானது இவ்வாறான ஒரு வர்க்கரீதியான கண்ணோட்டத்தை தன்னுள் தெளிவு படுத்திக் கொண்டு செயற்பட்டதேயொழிய இதற்கான நடைமுறைச் செயற்பாட்டுக்கான பத்சதுவைப் பிரச்சாரக் கருவியாகப் பெருமளவில் இனவாதத்தையே பாவித்தது. யு. என். பி யின் இக் கொள்கையானது "இனமென்ற மூடு திரைக்குள் எடுக்கப்பட்ட வர்க்க நலன் பேணும் நடவடிக்கை"எனின் மிகையாகாது.

தமிழரசுக் கட்சி:-

இலங்கை இந்தியர் மசோதா சம்பந்தமாகத் தமிழ்க் காங்கிரசில் இருந்து முரண்பட்டுப் பிரிந்தவர்களினால் உருவாக்கப்பட்ட கட்சியாகும்.

இக் கட்சியின் நிலைப்பாட்டை மிகச்சுருக்கமாக கூறுவதாயின் இன ஒதுக்கல் வாதமே பிரஜா உரிமைமசோதாவுக்கான பின்னணி எனக் கூறியது. தொழிலாளி வர்க்கமாகவும், அதே வேளையில் பெருந்தொகையான இந்திய மக்களாகவும் இருப்பதால், இலங்கையில் ஏற்கனவே பலமிழந்து நிற்கும் 25 இலட்சம் தமிழ் மக்களின் பலத்தை 10 இலட்சத்தால் குறைக்க எடுத்த நடவடிக்கையென எடுத்துக் காட்டியது. இக் கட்சி தனது நிலைப்பாட்டினால் இருந்து நோக்கியது சரியே. ஏனெனில் இன ஒதுக்கல் வாதம் இருந்ததென்பது அப்பட்டமான உண்மையாகும்.

மாக்ஸிய கட்சிகள்:-

இக் கட்சிகளைப் பொறுத்து என். எம். பெரேரா, கொல்வின், ஆர். டி. சில்வா, பீட்டர்கெனமன் போன்றோரது வாதங்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர்கள் வர்க்கரீதியாகவும் அதே வேளையில் இன ஒதுக்கல்வாதமாகவும் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். கொல்வின் ஆர். டி. சில்வா வர்க்க நிலைப்பாட்டுக்குப் பின்னால் இனவாதம்புதைந்து கிடப்பதாகவும், பீட்டர்கெனமன், என். எம் - பெரேரா போன்றோர் வர்க்க நிலையே மேம்பட்டு நிற்பதாகவும் கூறியுள்ளனர். இந்திய மக்களுக்குச் சார்பான முழு விவாதங்களையும் இதனடிப்படையிலேயே பாராளுமன்றத்தில் நிகழ்த்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே நாம் ஒப்பிட்டு மொத்தமாகப் பார்க்கின் வலது சாரிச் சிங்களத் தலைவர்கள் இந்திய மக்களுக்கான எந்த உரிமையையும் தயாராக இல்லாத நிலையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வாக்குரிமை போன்ற சகல உரிமைகளையும் மறுத்து அரசியல் அநாதைகளாக்கியதுடன், நாடு கடத்தும் நோக்குடனேயே செயற்பட்டுள்ளனர். இதற்கான பின்னணியென ஒதுக்கல் வாதத்தையும், வர்க்கத் தன்மையினையும் பிரித்துப் பார்ப்பதென்பது சுலபமான விடயமல்ல. ஒன்றுடன்ஒன்று இறுகப் பிணைந்த நிலையிலேயே இடம் பெற்றுள்ளன என்பதே பொருத்தமானதாகும்.

ஒப்பம் - என், கந்தசாமி

---

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11 வது தேசிய மகாநாட்டின்
தீர்மானம்

---

<u>நாடற்ற நிலை ஒழியட்டும்:-</u>

மலையகத் தமிழர்கள் சம்பந்தமாக எமது கட்சி பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கின்றது:

(1) 1964, 1974 இலங்கை - இந்திய ஒப்பந்தங்களின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு, ஆனால், ஒப்பந்தங்கள்-காலாவதியாவதற்கு முன்னர் அவ்வாறு பதிவு செய்யப்படாதவர்களுக்கு உடனடியாக இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படல் வேண்டும்.

(2) இலங்கையில் வசிக்கின்ற இந்திய வம்சாவளியினரான ஏனைய எல்லா நாடற்றவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட திகதிக்குள் இலங்கை அல்லது இந்தியப் பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிப்போருக்கு அதை வழங்க வேண்டும்.

(3) 1964, 1974 ஒப்பந்தங்களின் கீழ் இந்தியப்பிரஜா உரிமைக்கு விண்ணப்பம் செய்தவர்களும்இன்னும் இலங்கையில் இருப்பவர்களும் புதிதாக அளிக்கப்பட்ட வாய்ப்பின் கீழ் இந்தியப்பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கும் ஏனையோருக்கும் இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் வயதில் அல்லது அதற்கு முன்னர் இந்தியாவுக்குத் திரும்பும் வண்ணம் ஒரு திட்டத்தை உருவாக்கும் பொருட்டு இந்திய அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையர்களாக ஆகுபவர்கள் ஏனைய பிரஜைகளுடன் சமத்துவ அடிப்படையில் செயல்படும் வகையில் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக எல்லா தோட்டப்பாடசாலைகளும், மருத்தகங்களும், தேசியக்கல்வி, சுகாதார அமைப்பின் கீழ் சேர்க்கப்படல் வேண்டும். தோட்டங்களில்இம்மக்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் "லயன்" முறைகள் ஒழிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்ட சமூகங்களின் நலன்களுக்கு இசைவான வகையில் சரியான வீடமைப்பு முறைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

தோட்டத். தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கும் மலையத்தமிழர்கள், எமது நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் வலிமைக்கு ஒரு பெரும் ஊற்றுக் கண்ணாய் இருக்கின்றனர். ஜனநாயகப் போக்கில் இருந்து அவர்கள் தடுக்கப்பட்டிருப்பதை முடிவுக்குக் கொண்டுவருவது மாத்திரமின்றி அவர்களுக்கும் தாபன ரீதியாகஅணிதிரண்டுள்ள தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் எஞ்சியோருக்கும் இடையே நிலவுகின்ற பிரிவினையையும், (இது பூர்ஷுவா தலைவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது) விரைவாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பொதுப் போராட்டங்கள் பொதுவான வர்க்க ஸ்தாபனங்களுடன் மேன்மேலும் அதிகமாக அவர்களை நெருக்கமாக்க வேண்டும்.

சோசலிச அமைப்பின் கீழ் சோவியத் யூனியனின் மத்திய ஆசியக் குடியரசுகளில் முஸ்லீம் மக்கள் கண்டுள்ள பெரும் முன்னேற்றங்களின் செல்வாக்கின் காரணமாகவும் அரபு மர்றும்பிற முஸ்லீம் மக்களின் ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தினது செல்வாக்கின் காரணமாகவும் இலங்கை முஸ்லீம் மக்கள் மத்தியில் உள்ள இளைஞர்கள் புத்திஜீவிகள் மத்தியில் வளர்ந்துவரும் முர்போக்கு இயக்கத்தினை எமது கட்சி வரவேர்கின்றது.

இச் சமூகத்தில் முதலாளித்துவ தலைவர்களின் ஆதிக்கத்திர்கு எதிராகவும் இவர்றைக் குருட்டுத்தனமான அல்லது சோசலிச விரோத நிலைப்பாடுகளுக்குத் திருப்புவதன் மூலம் அவர்றின் ஏகாதிபத்திய விரோத நிலைப்பாட்டை முனைப் பாக்கும் - ஏகாதிபத்தியத்தினதும் அதன் மாவோவாதக் கூட்டணியினதும் பிரயத்தனங்களுக்கு எதிராகவும் இந் நாட்டின் இமது சாரி மர்றும் ஜனநாயகக் சக்திகளுடன் சேர்ந்து பொதுவான இலட்சியத்தை கொள்ளும் பொருட்டு இந்தச் சக்திகள் மேர் கொள்ளும் முயர்சிகளை நாம் ஆதரிக்கின்றோம்.

வரலார்று ரீதியாகப்பெர்ற கல்வி மற்றும் பிற அநீதிகளால் இலங்கை முஸ்லீம்கள் இன்னும் துன்புறுகின்றனர். இந்த அநீதிகளை கூடிய விரைவில் தாண்டும் பொருட்டு குறிப்பாக உயர் கல்விக்கான சிறப்புரிமையில் விசேட இடைக்கால ஏர்பாடுகள் செய்யப்பட வேண்டுமென எமது கட்சி பரிந்துரைக்கின்றது. இலங்கையின் பல கலைஞர்களாக வாழ்ந்து வரும் ஏனைய சிறு சிறு சமூகங்களின் கலாச்சார உரிமைகளும், மத நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் மதிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்